பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

25 07 2025 7 15
வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு நரேந்திர மோடி இங்கிலாந்து பயணத்தை முடித்துக்கொண்டு மாலத்தீவு புறப்பட்டார்.
- இந்தியா - இங்கிலாந்து இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், இரு நாடுகளின் வர்த்தகம் மற்றும் முதலீட்டுக்கு ஊக்கமளிக்கும் என்று மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.
- ஈர நிலங்கள் பாதுகாப்பில் இந்தியா முன்னணியில் உள்ளதாக மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.
- பிரதமரின் சூரிய சக்தி இல்லத் திட்டத்தின்கீழ் இதுவரை 17 லட்சத்திற்கும் மேற்பட்ட வீடுகள் பயனடைந்துள்ளதாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.
- உலக கோப்பை மகளிர் செஸ் போட்டியில் இந்தியாவின் கோனேரு ஹம்பி இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி இங்கிலாந்து பயணத்தை முடித்துக்கொண்டு மாலத்தீவு புறப்பட்டார்.

இங்கிலாந்து பயணத்தை முடித்துக்கொண்டு நேற்றிரவு மாலே புறப்பட்ட அவர், மாலத்தீவு அதிபருடன் இருதரப்பு ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து பேச்சு நடத்தவுள்ளார்.

கடர்சார் பாதுகாப்பு, பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்துவது உள்ளிட்டவை குறித்து இரு தலைவர்களும் ஆலோசனை நடத்த உள்ளனர்.

இருதரப்பு பேச்சுவார்த்தைக்குப் பின்னர், பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்தாக உள்ளன.

அந்நாட்டில் இந்தியாவின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் பல்வேறு உள்கட்டமைப்பு திட்டங்களையும் பிரதமர் தொடங்கி வைக்க உள்ளார்.

நாளை நடைபெற உள்ள மாலத்தீவின் 60வது சுதந்திர தின நிகழ்ச்சியில் பிரதமர் சிறப்பு விருந்தினராக பங்கேற்கிறார்.

திரு. நரேந்திர மோடியின் பயணத்தை முன்னிட்டு மாலேயில் அவருக்கு உற்சாக வரவேற்பளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

இந்தியா - இங்கிலாந்து இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், இரு நாடுகளின் வர்த்தகம் மற்றும் முதலீட்டுக்கு ஊக்கமளிக்கும் என்று மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

லண்டனில் எமது செய்தியாளரிடம் பேசிய அவர், விவசாயிகள், புத்தொழில் நிறுவனங்கள், சேவைத் துறைகளைச் சார்ந்தவர்கள் என பல்வேறு தரப்பினருக்கு இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் பெரிதும் பயனளிக்கும் என்று குறிப்பிட்டார்.

மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக இது தொடர்பாக விரிவாக ஆய்வு செய்யப்பட்டு இந்த ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இங்கிலாந்து சந்தையில் இந்தியப் பொருட்களுக்கான வாய்ப்புகள் அதிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

3 ஆண்டுகளுக்கும் குறைவாக இங்கிலாந்துக்கு குறுகிய காலப் பணிக்காக செல்லும் இந்தியர்களுக்கும் இந்த ஒப்பந்தம் பயனளிக்கும் என்று திரு. பியூஷ் கோயல் கூறினார்.

<<<<>>>>

ஈர நிலங்கள் பாதுகாப்பில் இந்தியா முன்னணியில் உள்ளதாக மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.

ஜிம்பாப்வேயில் நடைபெற்று வரும் ஈர நிலங்கள் தொடர்பான மாநாட்டில் நேற்று பேசிய அவர், இந்தியாவில் ராம்சார் ஈர நிலங்களின் எண்ணிக்கை 91ஆக அதிகரித்துள்ளது என்றார்.

ஈர நிலங்கள் எண்ணிக்கையில், இந்தியா ஆசியாவில் முதலிடத்தில் உள்ளதாகவும், உலகளவில் மூன்றாவது இடத்தில் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் ஒரு லட்சத்து 36 ஆயிரம் மில்லியன் ஹெக்டேர் ஈர நிலப்பரப்பு உள்ளதாக அவர் கூறினார்.

கடந்த 10 ஆண்டுகளில் ஈர நிலங்களின் கட்டமைப்பு 250 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

உதய்பூர் மற்றும் இந்தூர் ஆகிய இரு நகரங்கள், ஈர நில நகரங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகவும், இது நகர்ப்புற ஈர நிலங்களை மேம்படுத்துவதில் மத்திய அரசின் அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுவதாகவும் திரு. பூபேந்தர் யாதவ் கூறினார்.

<<<<>>>>

பிரதமரின் சூரிய மின்சக்தி மேற்கூரை வீடுகள் திட்டத்தின்கீழ் இதுவரை 17 லட்சத்திற்கும் மேற்பட்ட வீடுகள் பயனடைந்துள்ளதாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொடர்பான உச்சி மாநாட்டில் பேசிய அவர், பசுமை எரிசக்தி தொடர்பான இலக்குகளை குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாகவே இந்தியா எட்டி வருவதாக கூறினார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டின் மூலம் கடந்த ஆண்டில் மட்டும் நான்கு லட்சம் கோடி ரூபாய் சேமிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பிரதமரின் சூரியசக்தி இல்லத் திட்டம் விரைந்து செயல்படுத்தப்பட்டு வருவதாக திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறினார்.

<<<<>>>>

யோகா பயிற்சி மேற்கொள்வதன் மூலம் சர்க்கரை நோய் வராமல் தடுக்கலாம் என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வறிக்கையை மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டாவிடம் அவர் வழங்கினார்.

பின்னர் பேசிய டாக்டர் ஜிதேந்திர சிங், ஏற்கனவே சர்க்கரை நோய் பாதிப்புள்ளவர்கள் யோகா பயிற்சி மேற்கொள்வதன் மூலம் சிகிச்சைக்கான இன்சுலின் பயன்பாட்டைக் குறைக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

யோகா பயிற்சியின் மூலம் ஆரோக்கியமான இந்தியாவை உருவாக்க முடியும் என்றும் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறினார்.

<<<<>>>>

பீஹாரில் சிறப்பு திருத்த வாக்காளர் பட்டியல் பணியில் இதுவரை 99 சதவீத வாக்காளர்கள் குறித்த தகவல்கள் சரிபார்க்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

ஒரு லட்சம் வாக்காளர்களை கண்டுபிடிக்க முடியவில்லை என்றும், 21 லட்சத்துக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் இறந்துவிட்டதாகவும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

31 லட்சத்துக்கும் மேற்பட்டோர் நிரந்தரமாக இடம்பெயர்ந்துள்ளதாக தெரிவித்துள்ள தேர்தல் ஆணையம், 7 லட்சம் வாக்காளர்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட இடங்களில் பதிவு செய்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இன்னும் 7 லட்சம் வாக்காளர்களின் படிவங்கள் பெறப்படவில்லை என்றும், வரைவு வாக்காளர் பட்டியல் ஆகஸ்ட் ஒன்றாம் தேதி வெளியிடப்படும் என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஜி-20 அமைச்சர்கள் நிலையிலான கூட்டத்தில் பங்கேற்க வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. பபித்ரா மார்கரிடா தென்னாப்பிரிக்கா சென்றுள்ளார்.

இரண்டு நாட்கள் நடைபெறும் இக்கூட்டத்தில் பல்வேறு துறைகளின் வளர்ச்சி தொடர்பாக விரிவாக ஆலோசனை நடத்தப்படுகிறது.

இந்தக் கூட்டத்திற்கு இடையே பிரான்ஸ் வெளியுறவு இணையமைச்சர் திரு. **Mohammed Soili**-யை திரு. பபித்ரா மார்கரிடா சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து ஆலோசனை நடத்தினார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை மாலை தமிழகத்தின் தூத்துக்குடிக்கு வருகை தர உள்ளார்.

இதனையொட்டி விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தமிழகத்தின் கீழடி அகழாய்வு தொடர்பான துல்லியமான தகவல்களை வெளியிடுவதில் உலகளாவிய அறிவியல் நடைமுறைகளை பின்பற்ற தொல்லியல் துறை உறுதிபூண்டுள்ளது என்று மத்திய கலாச்சாரத் துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

இது தொடர்பான கேள்விக்கு மாநிலங்களவையில் பதிலளித்த அவர், தற்போது மாநில தொல்பொருள் ஆய்வுத்துறை மூலம் அகழாய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்றார்.

சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையின் உத்தரவின் பேரில் 2014-15 மற்றும் 2015-16-ம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வு அறிக்கை நிபுணர்களால் சரிபார்க்கப்பட்டு அறிக்கை ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

நிபுணர்களின் முடிவுகளையும் இணைத்து அதிகாரப்பூர்வ அறிக்கையை தொல்லியல் துறை வெளியிடும் என்று திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறினார்.

<<<<>>>>

ஒடிசா, மேற்குவங்கம், சத்தீஸ்கட் ஆகிய மாநிலங்களுக்கு உட்பட்ட சில பகுதிகளில் இன்று அதிகனமழை பெய்யக் கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஹிமாச்சலப்பிரதேசம், உத்தராகண்ட், உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களின் சில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

தலைநகர் தில்லியில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரளா, கடலோர கர்நாடகா ஆகிய பகுதிகளில் அடுத்த 5 நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

உலக கோப்பை மகளிர் செஸ் போட்டியில் இந்தியாவின் கோனேரு ஹம்பி இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஜார்ஜியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் அரையிறுதிச் சுற்றில் அவர், சீனாவின் **Lei Tingjie**-ஐ வென்றர்.

இறுதிச்சுற்றுக்கு முன்னேறியதன் மூலம் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள கேன்டிடேட் செஸ் போட்டியிலும் பங்கேற்க அவர் தகுதி பெற்றுள்ளார்.

இறுதிச் சுற்றில் இந்தியாவின் திவ்யா தேஷ்முக்கை, கோனேரு ஹம்பி எதிர்கொள்கிறார்.

இதன் மூலம் இப்போட்டியில் இந்தியா பட்டம் வெல்வது உறுதியாகியுள்ளது.

<<<<>>>>

துருக்கியில் நடைபெற்று வரும் சர்வதேச ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Sai Prasad Teegala** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் அவர் 21-5, 21-5 என்ற செட் கணக்கில் துருக்கியின் **Sonar Arda Aydin**-ஐ வென்றார்.

<<<<>>>>

பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான உலக விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் வைஷ்ணவி அட்கர் வெண்கலப் பதக்கம் வென்றார்.

ஜெர்மனியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் டென்னிஸ் ஒற்றையர் பிரிவில் அவர் இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

<<<<>>>>

இந்தியாவுக்கு எதிரான 4-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான நேற்று ஆட்ட நேர இறுதியில் இங்கிலாந்து தனது முதல் இன்னிங்சில் 2 விக்கெட் இழப்புக்கு 225 ரன் எடுத்துள்ளது.

<<<<>>>>

ஆசிய ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் தன்வீ ஷர்மா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இந்தோனேஷியாவின் **Solo**-வில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் 21-14, 21-15 என்ற செட் கணக்கில் தாய்லாந்தின் **Phannachaet**-ஐ வென்றார்.

<<<<>>>>